**<u>கண்டி மாநகர சபைக்கு மனிதவளக் கொள்வனவு அடிப்படையில் சனசமூக நிலையங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் பொறுப்பாளர் சேவையைப் பெற்றுக்கொள்ளல்</u>**

கண்டி மாநகர சபையின் சேவைத் தேவைக்கமைய, மனிதவளக் கொள்வனவு அடிப்படையில் சனசமூக நிலையங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் பொறுப்பாளர் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காகத் தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய, விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கப்படும் சேவையின் பெயரைக் குறிப்பிட்டு, 2026.07.17 ஆந் திகதிக்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. பதவிகளின் எண்ணிக்கை : 10 பதவிகள்

2. வயது : சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. நாளாந்தக் கொடுப்பனவு : நாளாந்தக் கொடுப்பனவு ரூ. 1333.33

4. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் 02 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இவற்றுள் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

   விளையாட்டுத் தகைமைகள் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

5. தெரிவு செய்யும் முறை : விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுள் ஆட்சேர்ப்புக்கு அவசியமான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்படுவார்கள் என்பதுடன், அவசியமான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதித்த பின்னர், உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்கள் பெற்ற புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

   சேவையைப் பெற்றுக்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் ஊழியர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலேயே சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

   1. நாளொன்றுக்குக் குறைந்தபட்சம் 09 மணித்தியாலங்கள் (சாதாரண கடமை நேரத்தினுள்) சேவையை வழங்குதல் வேண்டும்.

   2. முழுநேர அடிப்படையில் கடமைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

   3. சேவைத் தேவைக்கமையச் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சேவையில் ஈடுபட வேண்டும் என்பதுடன், விசேட கடமைகளுக்காக அரசாங்க விடுமுறை தினங்களில் சேவையை வழங்குவதற்காக அழைக்கப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேற்குறித்த கொடுப்பனவுக்கு உட்பட்ட வகையிலேயே சேவையை வழங்குதல் வேண்டும். வாரத்தின் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகள் விடுமுறை தினங்களாகக் கருதப்படுமாயினும், தேவைக்கேற்ப அத்தினங்களிலும் சிலவேளைகளில் சேவைக்கு அழைக்கப்படலாம்.

   4. சேவையை வழங்குவது தொடர்பில் 1 வருட காலப்பகுதிக்கான சேவை ஒப்பந்தமொன்றுக்கு உடன்படுதல் வேண்டும் என்பதுடன், சேவைத் தேவைக்கமைய இக்காலப்பகுதி நீடிக்கப்படும்.

6. வேறு தகைமைகள் :

- விண்ணப்பதாரர் கண்டி நகர எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- ஆட்சேர்ப்பிற்கான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- உடற்றகைமைகள் : பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அனைத்து வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாகத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு :- . இச்சேவையில் ஈடுபடுத்துவதற்கான விண்ணப்பங்களைக் கண்டி மாநகர சபையின் www.kandy.mc.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அவசியமான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம் கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு உரித்தானதாகும். விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் காலப்பகுதியின் போது, இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்துதல், மாற்றுதல், இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது இவ்வறிவித்தலைத் திருத்துதல் தொடர்பான முழுமையான அதிகாரம் கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு உரித்தானதாகும்.

2026.07.03

ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்க.
நகர ஆணையாளர்
கண்டி மாநகர சபை

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**<u>கண்டி மாநகர சபைக்கு மனிதவளக் கொள்வனவு அடிப்படையில் சனசமூக நிலையங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் பொறுப்பாளர் சேவையைப் பெற்றுக்கொள்ளல்</u>**

01. விண்ணப்பதாரர் வசிக்கின்ற உள்ளூராட்சி நிறுவனம். ................................................................

02. (அ) முதல் எழுத்துடன் பெயர் (தமிழில்) ............................................................................
(ஆ) முழுப் பெயர் (தமிழில்) ............................................................................
(இ) முழுப் பெயர் (ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பிறந்த திகதி :- வருடம் : .....................மாதம் .................... திகதி: ....................

05. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் (2026.07.17 திகதிக்கு வயது :
வருடங்கள் ............... மாதங்கள் ...................... நாட்கள் ...................

06. பால் .............................. .................................................................................

07. விவாகநிலை : ..............................................................................

08. நிரந்தர முகவரி : ..............................................................................

09. தொலைபேசி இல: ..............................................................................

10. நீங்கள் இலங்கை பிரசையா? : ....................................................................................................

அவ்வாறாயின் பரம்பரை அடிப்படையிலா? பதிவு செய்தல் அடிப்படையிலா? என்ற விபரம்
......................................................................

11 கல்வித் தகைமைகள்

11. (I) க.பொ..த (சாதாரண தர ) பரீட்சை

ஆண்டு ....................
சுட்டிலக்கம் - ....................

| இல | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |
| 09. | | |
| 10. | | |

11. (II) க.பொ..த (உயர் தரப்) பரீட்சை

ஆண்டு ....................
சுட்டிலக்கம் - ....................

| இல | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

11. பட்டம் அல்லது உயர் பாடநெறிகள் குறித்த விபரம்

.................................................................................................................................

..............................................................................................................................................

12. தொழில் தகைமைகள் மற்றும் சேவை அநுபவம்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

13. விண்ணப்பதாரரின் அத்தாட்சிப்படுத்தல்

என்னால் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியாதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகின்றேன். மேலே குறிப்பிட்ட விபரங்கள் பொய்யானது என்பதாக நான் சேவைக்கு தெரிவு செய்யப்பட முன்னதாக நிரூபனமானால் நான் நியமனம் பெறத் தகுதியில்லாதவராதுடன், நியமனம் பெற்ற பின்னர் நிரூபனமானால் எந்த ஒரு இழப்பீடும் வழங்கப்படாத நிலையில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனை அறிவேன்.

திகதி: ............................................

..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்